DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 929/2022

Prosecution Witness 3

| | | | |
|---|---|---|---|
| Name | : தமிழரசன் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.செல்வராஜ் | Calling | : |
| Village | : வடபுதூர் | Religion | : |
| Taluk | : | Age | : 30 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of August 2025.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 -ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)

<u>முதல் விசாரணை</u> :

1. நான் தற்போது வடபுதூரில் குடியிருக்கிறேன். ஈவன் மேனேஜ்மென்ட் செய்து வருகிறேன். கடந்த 04.11.2022 அன்று காலை சுமார் 11.30 மணியளவில் ரோட்டின் ஓரமாக எனது அம்மா மாடு மேய்த்துக்கொண்டு இருந்துள்ளார். அப்போது ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் வந்து விலாசம் விசாரிப்பதுபோல் பேசி என் அம்மாவிடம் இருந்து செயினை பறித்துச்சென்றுள்ளார்.

2. சம்பவம் நடந்து 5 நிமிடங்களுக்கு பதட்டத்திற்கு பிறகு தொலைபேசி மூலம் என்னை தொடர்புகொண்டு சங்கதியை கூறினார். உடனடியாக எனது சகோதரி மற்றும் மைத்துனருக்கு தகவல் கொடுத்துவிட்டு சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றேன். எனது அம்மாவிற்கு எந்த காயமும் ஏற்படவில்லை. நகையை பறித்துச் சென்ற நபரை தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. போலீசில் புகார் கொடுத்தோம்.

3. போலீசார் சம்பவ இடம் வந்து வரைபடம் வரைந்து விசாரணை செய்தார்கள். என்னிடம் சம்பவ இடம் சம்மந்தமாக கையொப்பம் பெற்றார்கள். என்னிடம்

காட்டப்படும் ஆவணத்தில உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். (பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் **அசாஆ 2** ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது).

4. போலீசார் விசாரணை செய்துவிட்டு மறுதினம் அழைத்தார்கள். நானும் கூடச்சென்றேன். சிங்காநல்லூர் பகுதியில் சென்று விசாரணை செய்தபோது இருசக்கர வாகனத்தை வைத்து ஒரு நபரை போலீசார் பிடித்து விசாரணை செய்தார்கள். அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவர் கையில் வைத்திருந்த செயினை கொடுத்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் இரண்டு ஆவணத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான், (ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையொப்ப் **அசாஆ 3** மற்றம் **அசாஆ 4** ஆவணங்களாக குறியீடு செய்யப்படுகிறது).

5. அதன்பிறகு அந்த நபரை வழக்கு சொத்துடன் காவல் நிலையம் அழைத்து வந்தார்கள். என் அம்மாவிடம் நகைகைய அடையாளம் காட்டுமாறு கூறினார்கள். நீதிமன்றத்தில் நகையை பெற்றுக்கொள்ளுங்கள் உன்று காவல் நிலையத்தில் கூறினார்கள். நீதிமன்றத்தில் இருந்து நகையை பெற்றுக்கொண்டோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

6. புகார் கொடுக்கும்போது காவல் நிலையத்திற்கு யாரெல்லாம் சென்றோம் என்றால் நான், எனது அம்மா, அக்கா, மாமா மற்றும் பக்கத்து தோட்டத்துக்காரர்கள் சென்றோம். மறுதினம் காவல் நிலையத்தில் இருந்து யார் எங்களை அழைத்தார்கள் யாருடன் காவல் நிலையம் சென்றேன் என்றால் எங்கள் ஊரின் தலைவர் எங்களை அழைத்தார். நானும் பக்கத்து தோட்டத்துக்காரரும் சென்றோம். எங்களுடைய ஊர் தலைவர்தான் காவல் நிலையத்தில் இருந்து அழைக்கிறார்கள் என்று தகவல் சொன்னார் என்றால் சரிதான்.

7. மறுதினம் தகவல் கிடைத்த பிறகு யாரெல்லாம் காவல் நிலையம் சென்றோம் என்றால் புகார் கொடுத்த அன்று சென்ற அனைத்து நபர்களும் காவல் நிலையம் சென்றோம். எத்தனை மணிக்கு வடபுதூரில் இருந்து நான் கிளமபினேன் என்றும் பக்கத்து தோட்டத்துக்காரரின் பெயர் என்ன என்றால் காலை சுமார் 07.30 மணிக்கு சென்றேன். பக்கத்து தோட்டத்துக்காரரின் பெயர் ஜெயபிரகாஷ். வபுதூரில் இருந்து காலை எந்த வாகனத்தில் காவல் நிலையம் சென்றோம் என்றால் மாருதி ஸ்விப்ட் காரில் சென்றோம்.

8. மறுதினம் காலை காவல் நிலையத்தில் என்ன நடந்தது என்றால் ஒரு சாட்சி கிடைத்துள்ளது அங்கு சென்று பார்ப்போம் என்று கூறி என்னையும் ஜெயபிரகாஷ் என்பவரையும் அழைத்து சென்றார்கள். என்னுடைய அம்மா மற்றும் சகோதரியை அங்கேயே இருக்கச்சொன்னார்கள். மறுதினம் என்னுடைய சகோதரி மற்றும் என்னுடைய அம்மா காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்று சாம்டசியமளித்துள்ளார் என்றால் அவர்கள் என்ன கூறினார்கள் என்று எனக்கு தெரியாது. புகார் கொடுத்த தினத்தை தவிர என்னுடைய சகோதரியும் அம்மாவும் காவல் நிலையத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல.

9. போலீசாருடன் சென்று காவல் நிலையம் திரும்பும்போது எவ்வளவு நேரம் இருக்கும் என்றால் அந்த நேரத்தில் என்னுடைய சகோதரியும் அம்மாவும் வீட்டிற்கு சென்றுவிட்டார்களா என்றால் இரண்டு மணி நேரத்திற்கு மேல் ஆனது. அவர்கள் வீட்டிற்கு சென்றார்களா என்று எனக்கு தெரியாது. கிணத்துக்கடவில் இருந்து எத்தனை பேர் சிங்காநல்லூருக்கு சென்றோம் என்றால் அது எனக்கு தற்போது நினைவில்லை. என்னுடன் யார் வந்தார்கள் என்றால் ஜெயபிரகாஷ் மற்றும் 4 போலீசார் உடன் வந்தார்கள்.

10. நாங்கள் எந்த பேருந்தில் சென்றோம் என்றால் பேருந்தில் செல்லவில்லை காரில் சென்றோம். என்ன வகையான கார் என்றால் அது எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. சாம்சி தானாக முன் வந்து போலீசாரின் ஜீப்பில் சென்றோம் என்று கூறினார். அனைவரும் ஒரே வாகனத்தில் பயணம் செய்தோமா அல்லது நானும் ஜெயபிரகாஷ் என்பரும் ஒரு வாகனத்திலும் போலீசார் மற்ற வாகனத்தில் வந்தார்களா என்றால் அனைவரும் ஒரே வாகனத்தில் தான் சென்றோம்.

11. வாகனத்தை எந்த காவலர் இயக்கினார் மற்றும் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் யார் வந்தார் என்றால் எனக்கு தெரியாது. கிணத்துக்கடவில்லை இருந்து நேரடியாக இருசக்கர வாகனம் இருந்த இடத்திற்குதான் நாங்கள் சென்றோமா என்றால் வாகனத்தின் பதிவு எண்ணை வைத்து நாங்கள் ஒரு ஊருக்கு சென்றோம்.அந்த ஊரின் பெயர் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. அதன்பிறகு வாகனம் இருந்த இடத்திற்கு சென்றோம். நாங்கள் சென்ற வாகனத்தில் போலீசார் பேனா மற்றும் லத்தியை தவிர வேறு ஏதேனும் பொருட்கள் கொணடு வந்தார்களா என்றால் கொண்டு வரவில்லை.

12. சிங்காநல்லூரில் எந்த பகுதிக்கு போலீசார் அழைத்து சென்றார்கள் என்றால் அந்த பகுதியின் பெயர் எனக்கு தெரியாது. போலீசார் வாகனம் இருந்த இடத்திற்கு சென்றவுடன் மக்கள் கூட்டம் கூடினார்களா என்றால் மக்கள் அங்கு கூட்டம் கூடவில்லை. நான் வாகனத்தில் அமர்ந்துகொண்டு இறங்கிச்சென்று பார்க்கவில்லை என்றால் சரிதான். நானும் ஜெயபிரகாஷ் என்பவரும் வாகனத்தை விட்டு இறங்கவில்லை என்றால் சரிதான். அங்கிருந்து நேரடியாக நாங்கள் காவலர்களுடன் காவல் நிலையம் வந்தோம் என்றால் சரிதான்.

13. நான் கையொப்பமிட்ட தாளில் எழுதப்பட்ருந்த சங்கதி எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து எத்தனை மணிக்கு என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் நேரம் எனக்கு நினைவில்லை.

<u>மறுவிசாரணை</u> : இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.